# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2108/40 - 2019 ජනවාරි මස 30 වැනි බදාදා - 2019.01.30

*2108/40 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/73* (XI)

**(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

*(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜோன் அமரதுங்க,
*சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்*
*கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.*

கொழும்பு,
*2019, சனவரி 30.*

ஒழுங்குவிதிகள்

*2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1774/27 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கடல் முலையூட்டிகள் (அவதானிப்பு, ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

*(1) 13 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-*

*“(13) (1) கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு உட்கருதுகின்ற ஆள் ஒவ்வொருவரும் அல்லது ஆட்கள் குழுமம் ஒவ்வொன்றும், பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து அல்லது அத்தகைய நோக்கத்துக்காகப் புறப்படும் இடத்தில் சமுகமாயிருக்கவேண்டியவரும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்டவருமான அலுவலரொருவரிடமிருந்து அதற்கென அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.*

*(2) அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நாடுகின்ற ஆள், அட்டவணை* IV *இல் தரப்பட்டுள்ள படிவத்தில் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்.*

*(3)* அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம், அட்டவணை V இல் தரப்பட்டுள்ள படிவத்திலிருத்தல் வேண்டும். அட்டவணை VI இல் தரப்பட்டுள்ளவாறான குறித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்." ;

*(2)* அதன் அட்டவணை V ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

**"அட்டவணை V**

தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

**கடல் முலையூட்டிகளை அவதானிக்கும் நோக்கத்திற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்**

................................................ என்னும் இடத்தைச் சேர்ந்த திரு./திருமதி ........................................................ என்பவர், அத்துடன்/ அல்லது ..................................................... எண்ணிக்கையான ஆட்களைக் கொண்ட உமது குழுமம் .............................. ஆந் திகதியன்று மு. ப. 5.30 மணிக்கும் பி. ப. 7.00 மணிக்கும் இடையில் ................................... வலயத்தில் ........................... ஆம் இலக்க உரிமத்தைக் கொண்ட கலத்தைப் பயன்படுத்தி கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றார்/அனுமதிக்கப்படுகின்றது.

**நிபந்தனைகள்**

(i) அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் கடல் முலையூட்டிகளை அவதானிக்கும் நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்ட கடல் வலயத்தை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும்.

(ii) அதிகாரமளிக்கப்படாத ஆள் எவரையும் அனுமதிக்கப்பட்ட கலத்தில் ஏற்றிச் செல்லுதலாகாது.

(iii) முலையூட்டிகளின் அவதானிப்பானது குறித்த திகதியில் விதித்துரைக்கப்பட்ட நேரங்களின்போது மட்டும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(iv) முலையூட்டிகளை அவதானிக்கின்ற வேளையில் கடல் முலையூட்டிகளின் இயற்கையான வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கும் எவற்றையும் செய்தலாகாது.

(v) முலையூட்டிகளை அவதானிக்கின்ற வேளையில் உணவுப் பதார்த்தங்களைக் கடலுக்குள் வீசுதலாகாது.

(vi) இவ்வனுமதிப்பத்திரத்தைப் பராதீனப்படுத்த முடியாது.

(vii) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள், (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்தவராதல்/அமைந்தோராதல் வேண்டும்.

**அட்டவணை VI**

வகுதி I

கல்பிட்டிய மற்றும் திருகோணமலைக் கடலோர வலயங்களினுட் பிரவேசிப்பதற்கான கட்டணங்கள்

| இல. | நிரல் I<br>ஆளின் விவரணம் | நிரல் II<br>கட்டணங்கள் |
|---|---|---|
| 1. | வயது வந்தவர் (உள்நாடு) | ரூபா 20.00 |
| 2. | சிறுவர் (உள்நாடு) (6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்) | ரூபா 10.00 |
| 3. | வயது வந்தவர் (வெளிநாடு) | 8 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமனானது |
| 4. | சிறுவர் (வெளிநாடு) (6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்) | 4 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமனானது |
| 5. | பாடசாலைச் சிறுவர்கள் (ஆள் ஒருவருக்கு) | ரூபா 5.00 |

## வகுதி II

*மிரிஸ்ஸ கடலோர வலயத்தினுட் பிரவேசிப்பதற்கான கட்டணங்கள்*

| இல. | நிரல் I<br>ஆளின் விவரணம் | நிரல் II<br>கட்டணங்கள் |
|---|---|---|
| 1. | வயது வந்தவர் (உள்நாடு) | ரூபா 150.00 |
| 2. | சிறுவர் (உள்நாடு) (6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்) | ரூபா 75.00 |
| 3. | வயது வந்தவர் (வெளிநாடு) | 15 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமனானது |
| 4. | சிறுவர் (வெளிநாடு) (6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்) | 7.50 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமனானது |
| 5. | பாடசாலைச் சிறுவர் (ஆள் ஒருவருக்கு) | ரூபா 5.00 |
| 6. | சேவை விதிப்பனவு (ஒரு உள்நாட்டவருக்கு) | ரூபா 50.00 |
| 7. | சேவை விதிப்பனவு (ஒரு வெளிநாட்டவருக்கு) | 1 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமனானது |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.